MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# சுந்தர ராமசாமி கவிதைகளில் தனிமனித வாழ்வியல்

**முனைவர் கு.வளர்மதி,**
**உதவிப்பேராசிரியர், இளங்கலைத் தமிழ்த்துறை,**
**தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,**
**சிவகாசி.**

DOI 10.5281/zenodo.18723967.

Abstract :

**Society is a group of individuals living together on the basis of certain norms. The need of the individual is essential in society. The state of society depends on the characteristics of the individuals who are members of the society. The life of an individual can be either happy or sad depending on the society in which he lives. Society is an instrument that cultivates man. This article aims to examine the life of the individual through the poems of Sundara Ramasamy.**

**KeyWords : Society – Sundara Ramasamy – Poetry**

## முன்னுரை

தனிமனிதர்கள் ஒருங்குகூடி சிலநெறிகளின் அடிப்படையில் வாழ்வது சமுதாயம் ஆகும். சமுதாயத்தில் தனிமனிதனின் தேவை இன்றியமையாதது. சமுதாயத்தின் உறுப்புகளாக அமையும் தனிமனிதர்களின் பண்பைப் பொறுத்தே சமுதாயநிலை அமையும். தனிமனிதனின் வாழ்வு என்பது அவன் வாழும் சமூதாயத்தைப் பொறுத்தே இன்பமாகவோ துன்பமாகவோ அமையக்கூடியது. சமுதாயம் மனிதனைப் பண்படுத்தும் ஓர் கருவியாக விளங்குகின்றது. சுந்தர ராமசாமியின் கவிதைகளின் வழி தனிமனித வாழ்வியலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தனிமனிதன் - குறிப்பு

தனிமனிதன் சமுதாயத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றான். “தனிமனிதன் தன் அன்றாடத்தேவைகளைப் பூர்த்தி செய்பவனாகவும்


http://Creativecommons.org//license/by/4.0/.

தன்னுடைய இலக்கை நோக்கிப் பயணிக்கும் தன்மை உடையவனாகவும் அவனைச் சுற்றி நல்ல மற்றும் தீயகுணங்கள் கொண்டவனாகவும் காணப்படுகின்றான். தனிமனிதனின் வாழ்வில் சமுதாயம் முக்கியப்பங்கு வகிக்கிறது எனலாம்."[1] தனிமனிதன் என்பவன் கட்டுண்டவனாகவும் துயருற்றவனாகவும் பேராசை, பொறாமை, வன்முறை, கவலை, வெறுப்பு, பயம் முதலிய குணங்கள் உடையவனாகவும் பட்டம், பதவி, புகழ், வெற்றி என பலவற்றுக்குச் சொந்தக்காரனாகவும் திகழ்கின்றான்.

தனிமனிதன் சமூகமயமாதலுக்குச் சமூகம்தான் ஒருகாரணி என சார்சு என்ற அறிஞர் கூறியுள்ளார். தனிமனிதன் தான் சார்ந்திருக்கின்ற குழுவை வைத்துதான் சமூகத்தில் ஓர்அங்கமாக உருவாக்கப்படுகின்றான் என்கிறார். சமுதாயத்திலிருந்துதான் எல்லாவற்றையும் மனிதன் கற்றுக்கொள்கின்றான் என்றும் குறிப்பிடுகின்றார்.[2] தனிமனிதன், தன்னைத்தானே அறிந்தவனாக இருக்க வேண்டும் என்று அறிஞர்கள் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

**மனிதவாழ்க்கை நிலைகள்**

வாழ்க்கை என்பது, விரும்பி அனுபவிக்கக் கூடியதாகும். அடுத்த வினாடிக்குள் புதைந்து கிடக்கும் இரகசியங்களைத் தேடித்தேடி நகர்ந்து கொண்டிருப்பதும் ஆசைகளையும் கனவுகளையும் நோக்கி இயங்கிக் கொண்டிருப்பதுமாகும். உண்பது,உறங்குவது மட்டும் வாழ்க்கையல்ல. வாழ்வின் உள்ளார்ந்த அர்த்தங்களைத் தேடுவதும் வாழ்க்கையே ஆகும். இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி, சாதனைகள், பின்னடைவு, உற்சாகம், கண்ணீர், துள்ளல் என்று வாழ்தல் மனிதனை வெவ்வேறாக இனங்காட்டிக்கொள்ள உதவுகின்றது.

"நான் குலுக்க வேண்டிய கை
நான் அணைக்க வேண்டிய தோள்
நான் படிக்க வேண்டிய நூல்


http://Creativecommons.org//license/by/4.0/.

நான் பணியாற்ற வேண்டிய இடம்
ஒன்றும் எனக்குத் தெரியவில்லை
இப்படி இருக்கிறது வாழ்க்கை"

தன் வாழ்க்கையைப் பற்றி எதுவுமே தெரியாமல், எங்கோ பயணித்துக் கொண்டிருக்கும் மனிதனின் வாழ்க்கை நிலையினைச் சுந்தரராமசாமி 'தேடல்' எனும் கவிதையில் பதிவிட்டுள்ளார். மேலும், வாழ்க்கையைப் பந்தாகவும் வாழ்தலைப் பந்தாடுதல் நிகழ்வாகவும் உருவகப்படுத்தியுள்ளார்.

"பலர் குவிந்து தாக்க
சுற்றிச் சுழன்று
ஒருவன் பிதுங்கி வர
பிதுங்கி வந்தவன்
ஓட்டமாய் ஓட
கைதட்டல்
சவால்"

என்று 'பந்தின் கதை' எனும் தன் கவிதையில், மனிதவாழ்க்கையின் ஓட்டம், பந்தின் ஓட்டமாக ஓடிக்கொண்டிருப்பதைச் சுந்தர ராமசாமி குறிப்பிட்டுள்ளார்.

**வாழ்க்கையின் தேவைகள்**

ஒவ்வொரு மனிதனின்; வாழ்க்கையிலும் தேவைகள் என்பவை மாறுபட்டுக் கொண்டே இருக்கும். ஒரு தேவை நிறைவடைந்தவுடன் மற்றொரு தேவையை மனிதன் நாடிச் செல்கின்றான்.

"கொஞ்சம் முகம் பார்த்து தலைசீவ ஒரு சந்திரன்
லோஷன் மணக்கும் பாத்ரூம்
என் மனக்குதிரைகள் நின்று அசைபோட ஒரு லாயம்"


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

சுந்தரராமசாமியின் ‘எனது தேவைகள்’ என்ற இக்கவிதை, தனிமனிதனின் தேவைகளைக் குறிப்பிடுவதாக அமைகின்றது. ஆடம்பரமானவை அனைத்தும் இன்றை சூழ்நிலையில் அடிப்படைத் தேவைகளாகி விட்டன என்பதையும் உணரமுடிகிறது.

**பிறருக்கு அஞ்சிவாழ்தல்**

மனிதன் தன்னுடைய வாழ்நாளில் சுற்றியுள்ளோர் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்று எண்ணி அவர்களைப் பார்த்து அஞ்சியே வாழ்கின்றான். இத்தகு மனநிலையில் வாழும் மனிதவாழ்க்கையை,

“நாமும் வாயிக்குப் பயந்து
வசவுக்குப் பயந்து
நக்கலுக்கு மனஞ்சுருங்கி;”

எனும் கவிதைவரிகளில் கவிஞர் தெளிவாக்கியுள்ளார். பிறர் என்ன சொல்லுவார்களோ? என்று அவர்களின் வாய்க்குப் பயந்து, வசவுக்குப் பயந்து, கேலிகிண்டல்களுக்கு பயந்து வாழும் மனித வாழ்க்கைநிலை இங்கே புலப்படுகின்றது.

**மனிதனின் தேடல்**

மனிதவாழ்வில் தேடல் என்பது அவசியமான ஒன்றாகும். மனிதர்கள் ஒவ்வொருவரும் தன்வாழ்வின் தேவைகளுக்காக ஏதேனும் ஒன்றைத்தேடி அலைந்து கொண்டுதான் இருக்கின்றனர். ஆனால், ஒருசிலர் எதைத் தேடுகின்றோம் என்றுகூடத் தெரியாமல் பொருளற்றுத் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

“தேடிப் பார்த்தேன்
-------------------------
தேடிய பொருளின்
பெயர் நான்


http://Creativecommons.org//license/by/4.0/.

அறியேன்.”

எனும் கவிதைவரிகளில், தேடும்பொருளின் பெயர்கூடத்தெரியாமல் தேடிஅலையும் மனிதர்களின் அறியாமை நிலையானது சுட்டப்பட்டுள்ளது.

**மனித எண்ணங்களின் அலைக்கழிப்பு**

மனிதனின் எண்ணங்கள் நிலைத்த தன்மையுடன் இருப்பதில்லை. ஒவ்வொரு மணித்துளியும் பல்வேறு எண்ணங்கள் மனிதர்களின் மனதில் ஓடிக்கொண்டே இருக்கின்றன. வீடு, மனைவி, மக்கள், கல்வி, வேலை, அலுவலகம், காமம், உடல்நிலை, பொருளாதாரப் பிரச்சினை, எதிர்கால வாழ்வியல் என்று தினந்தோறும் பல்வேறு எண்ணச்சிதறல்களாகவே மனிதமனம் உள்ளது.

“ஆசை அலை ஓயக்
காம அலை ஓய
எண்ண அலை ஓயத்
தவஞ்செய்தான்”

ஒருவன் தன்எண்ணங்களான ஆசை, காமம் போன்றவற்றின் அலைக்கழிப்பு காரணமாகத் தான் எனும் அகந்தை ஒழிந்து இறுதியில் இறக்கும்நிலையினைச் சுந்தர ராமசாமி ‘கடலில் ஒரு கலைஞன்’ எனும் இக்கவிதையில் குறிப்பிட்டுள்ளர்.

**மனச்சுமை மிகுந்த மனிதர்கள்**

மனிதனின் மனதில் பல்வேறு உணர்வுகள் அடங்கியுள்ளன. அவ்வுணர்வுகளை வெளியேற்றிட வேண்டும். இல்லையேல் அவ்வுணர்வுகள் மனிதனை அழித்துவிடும். “ஒரு மனிதனுக்கு அச்சமின்றி வாழ்க்கை இல்லை. அச்சம் மனிதனுடனே பிறந்தது என்று கூறலாம். மரணமே வாழ்க்கையின் எல்லை. அத்தகைய மரணத்தை எதிர்கொள்ளும்


http://Creativecommons.org//license/by/4.0/.

போது தைரியமாக எதிர்கொள்ள வேண்டும்."[3]ஒருவன் தன் மனச்சுமைகளை நினைத்து மரணத்தை எண்ணி நடக்கும் விதத்தினை,

"மனச்சுமை மனிதனை
மீண்டும் சந்தித்தேன்
கொண்டை ஊசியாக வளைந்திருந்தான்
அவன் வாய்
அவன் பாதங்களைக் கவ்விக் கொண்டிருந்தது
----------------------------
மரண பயத்தில் தான்
இரண்டாக மடிந்தேன் என்றான்"

மனச்சுமை என்பது ஒருவனை மரணத்தில் கொண்டுபோய் விட்டுவிடும் என்பதை 'மனச்சுமை மனிதன்' எனும் இக்கவிதையின் வாயிலாக ஆசிரியர் கூறியுள்ளார். மனச்சுமை என்பது, மனிதனை வாழவிடாமல் அலைக்கழித்து கொன்றுவிடுவதனை இன்றைய சூழலிலும் காணமுடிகிறது.

மனிதன் தன்னுடைய மனம் எனும் கதவைத் திறந்து வெளியில் வர வேண்டும். சாத்திக்கிடக்கும் கதவுகளை உபகரணங்கள் கொண்டு திறப்பது போல், மனிதன் தன் மனம் எனும் கதவினைத் திறக்க வேண்டும் என்பதை,

"குத்துதெறிக்கும்விடாதே
ஒரு உபகரணம் தேடியேனும் அதைத் திறந்துவிடு;"

ஒவ்வொரு மனிதனும் தன்மனதில் துயரங்களை எண்ணி மனம்வருந்தாது, தங்களது மனக்கதவினைத் திறந்து வெளியில் வரவேண்டும் என்று சுந்தரராமசாமி இக்கவிதைவரிகளில் குறிப்பிட்டுள்ளார்.

மனக்கதவினைப் பிறரிடம் திறக்க மனமில்லாது, மனம்திறந்து பேசினால் அடுத்தவர் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்களோ? என்ற


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

தேவையில்லாத எண்ணங்களால், மனிதர்கள் மனஇறுக்கத்துடன் வாழ்ந்து மனதிற்குள் புழுங்கித் தவிக்கின்றனர். மனதில் உள்ள பிரச்சினைகளைப் பிறரிடம் பகிர்தல் என்பது அவசியமாகும். பிரச்சினைகளை வாய்விட்டுக் கூறும்போது, மனப்பாரம் குறைவதுடன் சிக்கல்களுக்குத் தீர்வு காணப்படும். மனக்குழப்பமும் தீரும். பிறர் துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சியுறும் மனிதர்களே இன்றைய சமுதாயத்தில் மிகுதியாக உள்ளனர். அவர்களை விட்டுவிட்டுத் தகுந்த நபர்களிடம் நம் சிக்கல்களைத் தெரிவிக்கும்போது, மனம் ஆறுதல் பெறும். எனவே, திறந்த மனதோடு வாழ்தலே நலம் பயக்கும்.

**சுயநலமிக்க மனிதர்கள்**

ஐந்தறிவு உடைய அஃறிணை உயிரினங்கள் கூட பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி, சுயநலமற்ற வாழ்க்கையை வாழ்கின்றன. ஆறறிவு கொண்ட மனிதனோ தன்நலனையே முதன்மையாகக் கொண்டு சுயநலத்துடன் வாழ்கின்றான். மனிதர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு குணம் உண்டு. நல்லதும் கெட்டதும் கலந்து காணப்படும். மனிதனுடைய எண்ணங்களில் வெளிப்படும் இயல்புகளில் அதிகமாக வெளிப்படுவது அவனது கெட்டஎண்ணங்கள் தான்.[4] மனிதவாழ்க்கை என்று ஒட்டுமொத்தமாகக் காணும்போது நற்பண்புகளை விட தீயஎண்ணங்களே மேலோங்கி நிற்கின்றன. சொந்த காரியம் என்று வரும்போது மனிதன் குருடனாகிவிடுகின்றான். சுயநலக்குணம் என்பது வளரும் சூழ்நிலையைப் பொருத்தது. தன்நலத்தை மட்டும் கருத்தில் கொண்டு மற்றவர்களைப் பற்றிச் சிந்திப்பது குறைவாகவே மனிதர்களிடம் உள்ளது.

“உண்ணும் உணவில் குறுக்கிட்டால்
பட்டெனப் பிடுங்குவதில்
இவையெல்லாம் நாய்கள்”


http://Creativecommons.org//license/by/4.0/.

மனிதன், பிறருக்கு எனும்போது அதைப்பற்றிக் கவலைப்படாமலும் தனக்கென்று வரும்போது சுயநலமிக்கவனாகவும் மாறிவிடுகிறான். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை என்று வள்ளுவக்கருத்து கூறப்பட்டிருப்பினும் உண்ணும் உணவில்கூட மனிதர்களிடையே ஒற்றுமை இல்லை. மனிதனின் சுயநலமிக்க இந்நிலையினையே, 'நான் கண்ட நாய்கள்' எனும் இக்கவிதையில் ஆசிரியர் கூறியுள்ளார்.

**வறுமை நிலை**

சமுதாயத்தில் காணப்படுகின்ற மிகப்பெரிய கொடியநோய் வறுமை ஆகும். மனிதனின் அன்றாடத்தேவைகளான உணவு உடை உறையுள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்துகொள்ள இயலாத நிலையை வறுமை எனலாம். சமுதாயத்தில் காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வு ஒரு சாராரைச் செல்வந்தராகவும் மற்றொரு சாராரை வறுமையில் உழல்பவராகவும் ஆக்குகின்றது. வறுமை பற்றி வள்ளுவர்,

"இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்ய
மன்னவன் கோற்கீழ்ப் படின்."[5]

என்று குறிப்பிட்டுள்ளார். வறுமையில் வாடும் மனிதனின் அவலநிலையை, சுந்தர ராமசாமியின் 'ஆளற்ற லெவல் கிராஸிங்கில்' என்ற கவிதையானது, குறியீட்டுப்பொருளாகக் குறிப்பிடுகின்றது.

"ஆளற்ற லெவல் கிராஸிங்கில்
விபத்துகள் அதிகம் (முன்னை விடவும்)
ஏனெனில்
ஆளற்ற லெவல் கிராஸிங்கில்
ஆளில்லை லெவல் உண்டு"


http://Creativecommons.org//license/by/4.0/.

என நாட்டில் காணப்படும் வறுமைநிலைக்கு குறியீடாகச் சிவப்புநிறத்தினைச் சுந்தர ராமசாமி தன்கவிதையில் குறிப்பிட்டுள்ளார். வறுமையின் காரணமாகத் தன்னை விற்று வாழவேண்டிய கொடிய நிலையினை,

“சற்றே முதுமையிலும்
தன்னை விற்று வாழவேண்டிய நிலை”

முதுமைநிலையிலும் தன் வறுமையைப் போக்குவதற்குத் தன்னை விற்று வாழும் ஒரு பெண்ணின் அவலநிலையை இக்கவிதையானது சுட்டுகின்றது. மேலும், உண்ண உணவில்லாமல் சுள்ளிகளாக காய்ந்து வாடிப்போய் வறுமையில் இருக்கும் குடும்பத்தின் நிலையினை,

“உன் முகம்போல் காய்ந்திருக்கும் அச்சுள்ளிகள்
இன்றிரவு உன் உலைக்குப் பயன்படும்
உன் வயிற்றில் என்றும் அவியாது எரியும் உலையை
அவிக்க இச்சுள்ளிகள் இன்று பயன்படும்
சரி உலையில் போட உணவிருக்கிறதா?
இருக்குமென்றுதான் நம்புகிறேன்”

என்ற கவிதையில் வறுமையில் வாடும் ஒரு ஏழைக்குடும்பத்தின் நிலையினை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**சவால்கள் நிறைந்த உலகம்**

மனிதர்களின் வாழ்க்கை சவால்கள் நிறைந்த வாழ்க்கையாகவே உள்ளது. ஒவ்வொரு மனிதனும் தன்வாழ்க்கையில் ஏதேனும் ஒருசவாலினை ஏற்று அவற்றைச் சமாளித்து வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றான். ஒருமனிதன் தன்னை ஆற்றல்மிக்கவனாக எண்ணிச் சவால்விடும் பான்மையை,


http://Creativecommons.org//license/by/4.0/.

"ஓய்ந்தேன் என்று மகிழாதே
உறக்கமல்ல தியானம்
பின்வாங்கல் அல்ல பதுங்கல்."

எனும் கவிதையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஒருவன் எந்தவொரு செயலையும் பின்வாங்காமல் ஓய்வின்றிச் செய்துமுடிக்கும் ஆற்றல் என்னிடம் உள்ளது. நான் யாரைக்கண்டும் அஞ்சமாட்டேன் என்று துணிச்சலாகச் சவால்விடும் தன்மை இங்கே இடம்பெற்றுள்ளது.

**உறவுகள்**

மனிதன் ஒரு சமூகவிலங்கு ஆவான். மனிதர்களிடையே காணப்படும் உறவுமுறைகள் முக்கியமானவையாகும். மனிதசமுதாயத்தில் நிலவுகின்ற உறவுமுறைகளைப் பலபிரிவுகளாகப் பகுத்து நோக்கமுடியும்.

**போலித்தன்மை கொண்ட உறவுகள்**

உறவுகள் என்பவை முதலில் கவர்ந்திழுக்கும் தன்மையுடையனவாக அன்பைக் காட்டும். பின் இடம், காலம், சூழலுக்கேற்றவாறு தன் சுயரூபத்தைக் காட்ட ஆரம்பிக்கும். இதனை,

"உறவு அது அப்படித்தான்
கவர்ந்திழுக்க அத்தர் நெடியெங்கும்
அனைத்துத் திசையும் பூப்பூவாய்ப் பூக்கும்
மனங்கள் இணைந்து ஆக்கங்கள் மலரும்
காலடியில் அடிவானங்கள் குவியும்
அதன்பின் எகிறிக்குதித்து இரத்தம் கசியும்"

எனும் கவிதைவரிகளில் கவிஞர் குறிப்பிட்டுள்ளார். அத்தரானது தன்னுடைய மணத்தால் கவர்ந்திழுப்பதைப் போல உறவுகளும் முதலில் மணம்பரப்பி, பின்னர் காலப்போக்கில் தனக்குள் சண்டையிட்டு வாழும்நிலையே தற்காலச் சமுதாயத்தில் காணப்படுகின்றது. இவ்வாறாகப்



http://Creativecommons.org//license/by/4.0/.

போலியான உறவுகள் நிறைந்த சமுதாயமாகவே இன்றைய சமுதாயம் உள்ளது என்பதனைச் சுந்தர ராமசாமி இங்கே பதிவிட்டுள்ளார்.

**தந்தையின் ஏக்கவுணர்வு**

சிறுவயதிலிருந்தே தன்மகளின் மீது பாசம் கொண்ட தந்தையின் ஏக்கவுணர்வினைக் குறிப்பிடுவதாகச் சுந்தர ராமசாமியின் கவிதையொன்று அமைந்துள்ளது. தன்மகள் திருமணம் முடிந்து சென்ற நிலையில், தந்தையின் அகமனதில் தோன்றும் எண்ணங்களுக்கு ஆசிரியர் ‘பூக்கள் குலுங்கும் கனவு’ எனும் தலைப்பிலான கவிதையில் வடிவம் கொடுத்துள்ளார்.

“என்னருகே வெகுநாள் சின்னஞ்சிறு பெண்ணாக இருந்த நீ
எவ்வாறு இவ்வளவு பெரிய கனவாய் பந்தலில் விரிந்தாய்
------------------------------------------------------------
அந்த இளம் மீசையிடம் என்னைப் பற்றியும் கொஞ்சம்
சொல்லு
உன் கடந்த காலங்களின் பழைய நினைவாய்.”

இக்கவிதைவரிகள், மகளுக்குத் திருமணம் நடந்து சிலமாதங்கள் கழித்தும் தந்தையின் மனதில் சிலகாட்சிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்றும் சிறுகுழந்தையாகப் பார்த்த பெண்ணை திருமணக்கோலத்தில் பார்த்த நிகழ்வு, அவளின் அருகில் மீசையுடன் நின்ற ஆண், அவளின் பிரிவு ஆகியவற்றை நினைத்துப் பேசுவதாக அமைந்துள்ள தந்தையின் பாசப்போராட்டத்தையும் புலப்படுத்துகின்றன.

**பெண்களுக்கான உரிமை மறுக்கப்படும் நிலை**

மனிதர்கள் தன்வாழ்வில் ஏதேனுமொரு கொள்கைப்பிடிப்புடனே வாழ்கின்றனர். இல்லையெனில் தனக்கென்று ஒருகொள்கையினை வகுத்துக்கொண்டு அதன்படி நடந்து கொள்கின்றனர். ஆனால், பெண்களுக்கு


http://Creativecommons.org//license/by/4.0/.

மட்டும் கொள்கைகளை கடைப்பிடித்து வாழ்தல் என்பது மறுக்கப்படும் நிலையே உள்ளது.

“மேற்கே
ரொமாண்டிசிஸம்
நாச்சுரலிஸம்
ரியலிஸம்
அப்பால்
இம்பிரஷனிஸம்
என் மனைவிக்கு
தக்காளி ரஸம்”

கொள்கை என்பது ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது. ஆனால், இங்கு பெண்களுக்கு எந்தவொரு கொள்கையும் இருக்கக்கூடாது. அவர்கள் வீட்டுக்குள்ளே இருந்து குடும்பத்திற்காகவே வாழவேண்டும் என்பதை சுந்தர ராமசாமி கொள்கை எனும் தலைப்பிலான இக்கவிதை வரிகளில் புலப்படுத்துகின்றார்.

**துணையற்ற நிலை**

மனிதவாழ்வில் வாழ்க்கைத்துணை என்பது அவசியம், ஆணாக இருப்பினும் பெண்ணாக இருப்பினும் வாழ்க்கைத் துணையில்லாமல் வாழ்தல் என்பது கடினமானது. மனிதர்களால் தனித்து இயங்க இயலாது. மனிதவாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்விலும் யாரேனும் ஒருவரின் துணை கண்டிப்பாகத் தேவைப்படுகின்றது. ஆணொருவன் தனக்குத் துணையாக யாருமின்றித் தான்மட்டும் தனியாகப் பயணித்து வரும் தன்மையை,

“ரயிலில் பயணச்சீட்டின்றி


http://Creativecommons.org//license/by/4.0/.

நாடோடியாய் நான் அலைய ஆரம்பித்த பின்னர்
வளர்ந்த என் வெண்தாடி
தொப்புள் குழியை எட்டிவிட்டது
தங்கி இளைப்பாற ஒரு உயிர்
இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை"

எனும் இக்கவிதை வரிகளில், ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஒரு மனிதன் தனக்குத் துணையின்றித் தனிமையிலேயே பயணித்து வரும் நிலையினையும் தன் கஷ்டங்களைக் கூறுவதற்கு ஆளற்று தனித்திருக்கும் நிலையையும் ஆசிரியர் இங்கே புலப்படுத்துகின்றார்.

**குடும்பத்தில் பெண்களின் நிலை**

சமுதாயத்தில் மனிதஇனத்தின் தோற்றத்திற்கும் அதன் பல்வேறு செயல்பாடுகளுக்கும் பெண்களே அடிப்படைக் காரணங்களாக இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட பெண்களை அடிமைப்படுத்தி வாழும் நிலையே சமுதாயத்தில் காணப்படுகின்றது. "ஒவ்வொரு காலத்திலும் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டும் பலமற்றவள் என்றும் சுட்டப்படுகின்றனர். மாதர்கள் வீட்டுஅடிமைகள் என்று அழைக்கப்படுவதில் வியப்பில்லை. நாகரிகம் அடைந்த எல்லா நாடுகளிலும் கூட மாதர்களின் நிலை இவ்வாறு தான் உள்ளது"[6]என்பர்.

சமையலறைக்கும் படுக்கையறைக்கும் ரன்கள் எடுத்தே பெண் ரணமாகிப் போகின்றாள். வீட்டுவேலை செய்வதற்கும் பிள்ளை பெறுவதற்குமே பெண், பிறவி எடுத்துள்ளாள் என்ற எண்ணத்தை உடைக்க வேண்டும் என்பதை,

"பெண்ணே
உன் கடிதம்


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

எழுதுவது எப்படி என்று என்னைக் கேட்காதே
எழுது
அதுவே அதன் ரகசியம்
எழுது
எவர்முகமும் பாராமல்"

பெண் என்பவள் தான் விரும்பியதை அடைய வேண்டும் என்ற துணிச்சலுடன் பேனாவை ஆயுதமாக எடுத்து எழுத வேண்டும். எழுதுவதற்கான கருவை வேறெங்கும் தேடவேண்டியதில்லை தம் சொந்தஅனுபவங்களே போதும் என்றும் பெண்ணே, சமுதாயத்தில் ஓர்அங்கமாக வலம் வரவேண்டும் என்றும் கவிஞர் இக்கவிதையின்வழி பெண்களுக்கு அறைகூவல் விடுக்கின்றார்.

பெண்கள், தனக்கென்று வாழாமல் தன்குடும்பத்திற்காகவே தன்னுடைய வாழ்வை அர்ப்பணித்துக் கொள்கின்றனர். வெளியுலகம் ஏதுமறியாமல் மின்விசிறி போன்று ஒரேஇடத்தில் சுழன்று கொண்டிருக்கும் நிலையினை,

"இந்த மின்விசிறிகளின் சுழற்சியில்
இவற்றின் விட்டம் அதிகரிக்க
---------------------------------------
ஒருபோதும் இவை வானத்தைக் கண்டதில்லை
என எண்ணும்போதும்
வருத்தம் என் மனத்தைக் கவ்வுகிறது."

பெண்கள் தன்சுயத்தினைக் கருதாது குடும்பம் என்ற ஒரேவட்டத்திற்குள் சுழன்று கொண்டிருக்கும் நிலையினைச் சுந்தரராமசாமி இக்கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

**கணவன் - மனைவி உறவுநிலை**


http://Creativecommons.org//license/by/4.0/.

கணவன், மனைவி இருவருக்கும் இடையே வாழ்வில் புரிதல் என்பது மிகவும் அவசியமாகும். ஒருவரையொருவர் புரிந்துகொண்டால் அவர்களின் வாழ்வானது சிறந்து விளங்கும். மனைவியின் கஷ்டங்களில் கணவனும் கணவனின் கஷ்டங்களில் மனைவியும் பங்கெடுத்துக் கொண்டால், அவர்களுக்கிடையே அமையும் உறவானது நன்முறையில் அமையும்.

தன்னுடைய கஷ்டங்களைப் பிறருக்கு வெளிப்படுத்தாமல் தனக்குள்ளே வைத்துக்கொண்டு தன்நலத்தினைப் பேணாது அழுதுகொண்டிருக்கும் ஒருபெண்ணின் மனநிலையினைப் புரிந்துகொண்ட கணவன்,

"நான் கவனிப்பதைக்
கவனித்து மிரளாதே
நான் உன் கஷ்டங்களின் மறுபக்கம்"

என்று தன்னுடைய மனைவிக்கு எப்போதும் தக்கதுணையாகத் தானிருப்பதாக ஆறுதல் கூறுகின்றான் என்பது இங்கே தெளிவாகின்றது. ஒரு பெண்ணுக்கு குறிப்பாக மனைவி என்ற நிலையில் அவளைப் புரிந்துகொள்ள ஆயிரம் உறவுகள் இருப்பினும் கணவனின் புரிதலே அவளின் முதன்மைத் தேவையாகும். இவ்வாறு அமையும் வாழ்க்கையே சிறந்ததொரு இல்லறவாழ்க்கையாக அமையும் என்பதும் இங்கே புலனாகின்றது.

**தொகுப்புரை**

சமுதாயத்தின் அங்கமாகத் திகழும் தனிமனித வாழ்வியல் சுந்தர ராசாமியின் கவிதைகளின் வழி இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது. தனிமனிதன் சமுதாயத்தில் ஒரு நல்லநிலையில் வாழவேண்டுமென்று எண்ணுகின்றான். தான் மட்டும் நன்றாக வாழவேண்டும் என்ற சிந்தனையே


http://Creativecommons.org//license/by/4.0/.

அவனை சுயநலவாதியாக மாற்றுகின்றது என்பது இக்கட்டுரையில் தெளிவாகின்றது.

மனஎண்ணங்களைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ளுதல் என்பது மனிதவாழ்வில் மிகவும் தேவையாகும். மனச்சுமைகளைப் பகிர்ந்துகொண்டால் சிக்கல்களுக்குத் தீர்வு காணஇயலும் என்ற கருத்தும் இக்கட்டுரையில் புலனாகின்றது.

தனிமனிதன் வாழ்க்கைப்பயணத்தில் வழிதெரியாமல், பந்தின்ஓட்டமாக ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய சமுதாயநிலையினையும் சுந்தரராமசாமியின் கவிதைகளின்வழி இக்கட்டுரையில் காணமுடிகிறது.

ஒருமனிதன் சமுதாயத்தில் பிறருக்கு அஞ்சி வாழும்நிலை, வாழ்வின் தேடல், மனதின் அலைக்கழிப்புகளால் ஏற்படும் மரணநிலை போன்றனவும் இக்கட்டுரையில் தெளிவாகின்றது.

உறவுகளைச் சார்ந்து வாழ்தல், குடும்பத்தில் பெண்களின் அவலநிலை, பெண்களுக்கான உரிமை மறுக்கப்படும் நிலை போன்றவற்றைப் புலப்படுத்துவதாக இவ்வியலானது அமைந்துள்ளது. இவ்வாறாக, தனிமனித வாழ்க்கையின் பல்வேறு நிலைப்பாடுகள், உறவுகளின் முக்கியத்துவம் ஆகியவை இக்கட்டுரையில் தெளிவாகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி - 7, ப.108
2. க.கைலாசபதி, இலக்கியத்தில் சமுதாயச்சிந்தனை, ப.75
3. தனஞ்ஜெயபாரதி,புதுயுகத்துறவியின்புரட்சிக்கர்ஜனை, ப.17
4. ஔவையார், தனிப்பாடல் திரட்டு, ப.242
5. திருவள்ளுவர், குறள்., - 558
6. வீ.அண்ணாமலை, புதுக்கவிதைகளில் சமுதாயம்,ப.190

## துணைநூல் பட்டியல்


http://Creativecommons.org//license/by/4.0/.

1. அருணாச்சலம் - ரூசோவும் பாரதிதாசனும், தி.பார்க்கர், இராயப்பேட்டை, சென்னை, 2004.
2. சுப்பிரமணியன், கா.நா.,- நாவல் கலை, கலைஞன் பதிப்பகம், சென்னை, 1985.
3. சுப்பிரமணியன், ச.வே., - மெய்யப்பன் தமிழ் அகராதி, மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, 2006.
4. ராஜமார்த்தாண்டம் - சுந்தர ராமசாமி கவிதைகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2005.


http://Creativecommons.org//license/by/4.0/.